வேத ஆகமத்தைப் படிப்பதற்கு ஏற்பாடு செய்து, எல்லா ஆலயங்களிலும் கம்பல்சரியாக ஒரு அரிசன அர்ச்சகரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வேத ஆகமம் படித்தவர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆகம விதிகளின்படி போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் சொல்லியபடி அரசியல் சட்டத்திருத்தம் வருவதாக இருந்தால் யாராக இருந்தாலும், எந்த ஜாதியாக இருந்தாலும் அர்ச்சகராக நியமிக்கப்படலாம்.

அருள்திரு நடராஜர் கோயில், சிதம்பரம்

*568 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் அருள்திரு நடராஜர் கோயில் இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கி வருகின்றதா?

மாண்புமிகு திரு. மு கண்ணப்பன் : இத்திருக்கோயிலுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்வது நீங்கலாக மற்றவை இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சிதம்பரத்திலே இருக்கின்ற நடராஜர் கோவில், தர்மபுரம் ஆதினத்தின்கீழ் உள்ள கோவில்கள், திருவாவடுதுறை ஆதீனத்தின்கீழ் உள்ள கோவில்கள் ஆகியவற்றில் எல்லாம் டிரஸ்டிகளை நியமிக்கும்போது, அவர்களை நியமிக்கும் அதிகாரம் அரசுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். அந்த அதிகாரத்தைப்பெற நமது அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சிதம்பரத்திலே இருக்கின்ற நடராஜர் கோவிலைப்பற்றித்தான் விவரம் இருக்கிறது. இந்த கோவிலைப் பொறுத்தவரையில் அறங்காவலர்களை நியமிப்பது சுப்ரீம் கோர்ட் தீர்ப்புப்படி நடக்கிறது. 1933-ம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பின்படியும், அதற்குப் பிறகு சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் படியும், 1936-ம் ஆண்டு தீர்ப்பின்படியும் மாற்றியமைக்கப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்கீழ் அறங்காவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

1973 டிசம்பர் 1]

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சிதம்பரத்திலே நடராஜர் கோவிலில் ஏதோ இரகசியம் இருப்பதாகவும், சிதம்பர இரகசியம், சிதம்பர இரகசியம் என்றும் சொல்கிறார்கள். அதைப்பார்க்க 1¼ ரூபாய் கொடுத்தால் அனுமதிக்கப்படுவதாகச் சொல்லப் படுகிறது. அதை அறிந்துகொள்ளும் வாய்ப்பு எங்களுக்கு இல்லை. அமைச்சரவர்கள் தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படியானால் அந்த இரகசியத்தை அமைச்சரவர்கள் இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இரகசிய மாக இருக்கவேண்டிய செய்தியை சட்ட மன்றத்தில் சொல்ல முடியாது. திரு. வீராசாமி அவர்கள் விரும்பினால் சென்று பார்த்து வரலாம்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் பதவி

*539 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-74 கல்வி ஆண்டில் புதிதாக எத்தனை ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1973-74-ல் மாநில அரசுத் திட்ட பணிகளில் 6–11 வயதுச் சிறார்களைக் கூடுதலாகச் சேர்க்க 600 கூடுதல் ஆசிரியர் பதவிகளும், 11–14 வயதுச் சிறார்களைக் கூடுதலாகச் சேர்க்க 500 கூடுதல் ஆசிரியர் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை போக, இந்தியாவெங்கும் படித்து வேலை வாய்ப்பு இன்றியிருப்போருள் 5 லட்சம் பேருக்கு 1973-74-ல் வேலை வாய்ப்பளிப்பதற்கான சிறப்புத் திட்டத்தின் கீழ் நம் மாநிலத்தில் 10,200 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இதில் 6,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களும் 500 ஹையர் கிரேடு ஆசிரியர்களும் இடம் பெறுகிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த பள்ளி ஆசிரியர்களை நியமிக்கும்போது உள்ளாட்சித் துறையில்—ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் ஒரு ‘அப்பாயின்ட் மென்ட் கமிட்டி’ வைத்து, அதன் மூலமாக நியமிக்கிறார்கள். அதிலே பல மோசடிகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை